# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத அவசரக்கூட்டம் 09.09.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பயன்பாட்டில் உள்ள 12 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்களில் (Battery Operated vehicles) வருடாந்திர பராமரிப்பு பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொள்வதற்கு ஏதுவாக, பழுதடைந்த நிலையில் உள்ள 7 எண்ணம் வாகனங்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7,45,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2539 நாள் 22.07.2021-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு, 01.09.02021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Thiraviyam InfoTech<br>6/18, Angayarkanni Colony,<br>Tiruppalai, Madurai - 14 | மதிப்பீட்டை விட 0.48% குறைவு<br>(ரூ.7,39,837/-) |
| 2 | M/s.Priyam Industries and Engg.Pvt Ltd.,<br>48/88, Old Palani Road<br>Kolinjiwadi Agarharam<br>Dharapuram, Trippur District | மதிப்பீட்டை விட 0.65% குறைவு<br>(ரூ.7,38,578/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Priyam Industries and Engg. Pvt. Ltd., Dharapuram நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.65% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1005/2020/இ1

**தீர்மானம் எண்.2561 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி ஆட்டோ TN 75 P 8399 (APE Porter 600)-ல் ஏற்பட்டு வாகனம் இயக்க இயலாத நிலை எற்பட்டதால், பொது சுகாதாரப் பணிகளில், மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, ரூ.25,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக, 07.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Mathava Motor works,<br>Vellamadam | மதிப்பீட்டை விட 10.63% அதிகம்<br>(ரூ.22,900/-) |
| 2 | M/s.Ganesh Motor works,<br>Vadasery | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ.20,700/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Ganesh Motor works, Vadasery நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1406/2014/எச்1

**தீர்மானம் எண்.2562 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத அவசரக்கூட்டம் 14.09.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35871/2014/இ1 நாள் 08.09.2021-ல், நகராட்சிகளில் மின் பயன்பாடு மற்றும் அதற்கான செலவினங்களை குறைக்கும் விதமாக அனைத்து தெருவிளக்குகளையும் குறைந்த அளவு மின்சாரத்தில் செயல்பட கூடிய ஒளிர் உமிழ்விளக்குகளாக (LED) மாற்றியமைப்பதற்கு வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.39,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA4) நாள் 21.04.2017-ன் படி, மேற்படி திட்டத்தினை 2021-22 ஆம் ஆண்டு செயல்படுத்துவதற்கு ஏதுவாக, தமிழக நிதி அமைச்சரால் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து விதமான தெருவிளக்குகளையும் குறைந்த மின்சாரத்தில் செயல்பட கூடிய ஒளிர் உமிழ்விளக்குகளாக (LED) மாற்றுவதற்கு, IGA Agency மூலம் ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள திட்ட அறிக்கையின் படி, மதிப்பீடு தயார் செய்வதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்நகராட்சியில், Replacement of all categories of Street lights into Light Emission Diode Lamps (LED) திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு, ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| S. No. | Existing Street light Details | | Proposed LED lights | |
|---|---|---|---|---|
| 1 | Street light with 40 W Florescent fitting | 1338 Nos. | 20 W LED | 1338 Nos. |
| 2 | 250 W Sodium Vapour lamp | 37 Nos. | 120 W LED | 37 Nos. |
| 3 | 36 W CFL light | 170 Nos. | 20 W LED | 170 Nos. |
| 4 | 72 W CFL light | 35 Nos. | 48 W LED | 35 Nos. |
| 5 | High Mast light | 1 No. | - | - |
| 6 | Mini Mast light | 8 Nos. | - | - |
| 7 | Solar Mini Mast light | 12 Nos. | - | - |
| | **Total** | **1601 Nos.** | | **1580 Nos.** |

எனவே மேற்காணும் திட்டப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.75.00 இலட்சத்தினை முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1050-1/2021/இ1

**தீர்மானம் எண்.2563 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/தி2 நாள் 08.09.2021-ல் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொது மக்களின் நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் 3096 விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளதில், நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் 2021-22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பினை வெளியிட்டுள்ளதால், நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துவது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையினை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 6 பூங்காக்களை நவீன பூங்காவாக மாற்றுவதற்கான பணிகள் (சுற்றுச்சுவர் அமைத்தல், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருட்கள் நிறுவுதல், செடி, கொடிகள் நடுதல் மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்தல்) மேற்கொள்வதற்கும், துறைமுகத்தெருவில் புனித காணிக்கை மாதா திருத்தலம் அருகில் உள்ள போர் வெற்றித்தூண் பூங்காவை மேம்படுத்துவதற்கும் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Providing New park at K.S.S.S colony, Thozhamai Colony, Boundary road near Veterinary Hospital and Anganwadi backside, Narikkal and Singankavu near Kovil in Colachel Municipality. | 78.00 |
| 2 | Maintenance of Existing park at Port street Victory pillar park near Kanikkai Matha church in Colachel Municipality. | 28.00 |
| | **Total** | **106.00** |

எனவே மேற்காணும் பூங்கா மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.106.00 இலட்சம் தொகையினை முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1051-2/2021/இ1

**தீர்மானம் எண்.2564 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17-ல் பழைய சந்தை சாலையில் (Old Market Road) அம்மா உணவகம் முதல் நரிக்கல் நாகராஜா கோயில் வரை மழைநீர் வடிகால் ஓடையின் பக்கசுவர், Vent portion ஆகியவை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், மழை நீர் வடிகால் ஓடையில் தேங்கி, சாலை மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. இதனால் சுகாதார சீர் கேடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது நலன் கருதி, மேற்படி பகுதியில் வடிகால்

ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,90,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1046-1/2021/இ1

**தீர்மானம் எண்.2565 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத அவசரக்கூட்டம் 28.09.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வெள்ளியாகுளம் ஏலாவிலிருந்து உபரிநீர் வெளியேறும் நரிக்கல் பகுதி நீர் வழித்தடத்தில், சிங்கன்காவு முதல் களிமார் வடிகாலில் தூர் வாருதல் பணியினை மேற்கொள்வதற்கும், நரிக்கல் நாகராஜா கோவில் அருகில் தடுப்பு சுவர் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2566 நாள் 31.08.2021-ன் படி ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 16.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.55% அதிகம்<br>(ரூ.3,71,820/-) |
| 2. | திரு.எஸ்.சத்தியதாஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br>(ரூ.3,66,096/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.454-1/2021/இ1

**தீர்மானம் எண்.2566 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் 2020-21 ஆம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி, இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி மற்றும் சேவை வரி தொடர்பான விவரங்கள் Online-ல் பதிவு செய்த வகையில் ரூ.20,000/- Jacob & Jacob நிறுவனம் மார்த்தாண்டம் அவர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1219/2015/பி1

**தீர்மானம் எண்.2567 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.13,14,18,22,36,37,39, கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 33 முதல் 40, 47 முதல் 52, 57 முதல் 64, கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள் 25,32 நவீன மீன்சந்தை தரை தளம் கடை எண்கள்.3,4,6,7 முதல் தளம் கடை எண்கள் 1,6 ஆகிய கடைகளுக்கு 22.09.2021-ல் பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு,

**நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.1**

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | C.K.மனோஜ் | 5000/- (GST தவிர) | 5000/- (GST தவிர) (C.K.மனோஜ்) |

மேற்படி கடைக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.1-க்கு ஒரே ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார். இந்த கடைக்கு 22.09.2021-ல் 14-வது ஏலம் ஆகும். கடைக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக திரு.C.K.மனோஜ் என்பவர் மாத வாடகையாக ரூ.5000/-க்கு (GST தவிர) கேட்டுள்ளார்.

கலம் (4)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும், ஏலம் போகாத காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.13,14,18,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிகவளாக கடை எண்கள் 33 முதல் 40,47 முதல் 52, 57 முதல் 64 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரைதளம் கடை எண்கள் 3,4,6,7 முதல் தளம் கடை எண்.6 ஆகிய கடைகளை மறு ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2568 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக தொலைபேசி செய்தி நாள் 27.09.2021 -ன் படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - காமராஜர் பேருந்து நிலையம், டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை, அண்ணாசிலை அருகில், துறைமுக பாலம் அருகில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பொது கழிப்பிடங்கள் மற்றும் சி.எம்.சி காலனியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 7.50 |

மேற்காணும் பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.7,50,000/- ஐ திட்ட நிதியின் கீழ் முழு மானியமாக ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1127/2021/இ1

**தீர்மானம் எண்.2569 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு மீன் ஏலக்கூடம் அருகில் மற்றும் தும்பக்காடு பகுதியில் பகிர்மான குழாய்களில் உடைவு ஏற்பட்டு, கழிவு நீர் கலந்தாலும், பள்ளி ரோட்டில் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்ட போது, துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிற்கு செல்லும் பிரதான குழாயில் உடைவு ஏற்பட்டதாலும், குடிநீர் வினியோகம் பதிக்கப்பட்டதால், பொது மக்கள் நலன் கருதி, குடிநீர் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி பகுதிகளில் பகிர்மான குழாய்களை மாற்றும் பணியினை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ், திரு.சி.சந்திரசேகர், நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.1,36,000/-ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.132/2021/இ1

**தீர்மானம் எண்.2570 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாராந்திர ஆய்வுக்கூட்ட அறிவுரைப்படி, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் உருவாகும் திடக்கழிவுகளை உலர்ந்த கழிவுகள் மற்றும் ஈரக் கழிவுகள் என வீட்டிலேயே பிரித்து, உலர்க் கழிவுகளை (பேப்பர், அட்டை, கண்ணாடி, பாட்டில் பிளாஸ்டிக், ரப்பர், துணி இன்னும் பிற) நகராட்சிப் பணியாளர்களிடமும், ஈரக்கழிவுகளை (காய்கறி கழிவுகள், பழம்,பூ மற்றும் மட்கக்கூடிய கழிவுகள்) அவரவர் வீட்டிலேயே உரமாக்கும் முறையினை நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளினை முழுமையாக கடை பிடித்து உள்ளாட்சி நிர்வாகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது இன்றிமையாதது என்பதனைக் கருத்திற் கொண்டு, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளிலும், வீடுகளில் உருவாகும் மேற்படி மட்கும் கழிவுகளை வீட்டிலேயே உரமாக்க உரிய ஆலோசனைகள் வழங்கவும், கடைப்பிடிக்காதவர்கள் மீது நடவடிக்கைகளை நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.889/2021/எச்1

**தீர்மானம் எண்.2571 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாராந்திர ஆய்வுக்கூட்ட அறிவுரைப்படி, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் உருவாகும் கழிவு நீர்களை (சமையலறை கழிவு நீர் மற்றும் குளியலறை கழிவுநீர் குடியிருப்பு வளாகத்திலேயே உறிஞ்சு குழி அமைத்துவிடுமாறு அறிவுறுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டது.

நகராட்சி சுகாதார துணை விதிகளினை முழுமையாக கடை பிடித்து உள்ளாட்சி நிர்வாகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது இன்றிமையாதது என்பதனைக் கருத்திற் கொண்டு, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளிலும், வீடுகளில் உருவாகும் கழிவு நீர்களை உறிஞ்சு குழி அமைத்து விடுவதற்கு அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் நகராட்சி மூலம் வடிகால்களில் விடப்படும் குழாய்களை அடைத்து நடவடிக்கை எடுக்க அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.889/2021/எச்1

**தீர்மானம் எண்.2572 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் செப்டம்பர் மாத சாதாரணக்கூட்டம் 30.09.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள்.1,2,3,4,5,7,10,11 கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள்.4,5,6,7 ஆகிய கடைகளுக்கு குத்தகை காலம் 31.07.2021 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள். 8,9,24,25 ஆகிய கடைகளுக்கு 31.08.2021 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேலும் கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள்.14,21 கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள்.28 ஆகிய கடைகளுக்கு குத்தகை காலம் 30.09.2021 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைகிறது. மேற்படி கடைகளுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்வதற்கான குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- வீதம் இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள்.1,2,3,4,5,7,10,11 கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள்.4,5,6,7 ஆகிய கடைகளுக்கு 01.08.2021 முதல் 31.07.2021 வரைக்கும், கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள் 8,9,24,25 ஆகிய கடைகளுக்கு 01.09.2021 முதல் 31.08.2021 வரைக்கும் மேலும் கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்.14,21 கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்.28 ஆகிய கடைகளுக்கு 01.10.2021 முதல் 30.09.2021 வரைக்கும் வாடகை தொகையில் 15% உயர்வு செய்து கீழ்காணும் விபரப்படி வாடகை தொகை உயர்வு செய்ய மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண். | வணிக வளாகத்தின் பெயர் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | தற்போதைய மாதம் வாடகை (மாதம் 1-க்கு G.S.T தவிர) | 15% உயர்வு செய்த வாடகை | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை (மாதம் 1-க்கு G.S.T தவிர) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் | 1 | 148/2018040 | நிர்மலா | 6000/- | 900/- | 6900/- |
| 2 | | 2 | 148/2018041 | நிர்மலா | 6000/- | 900/- | 6900/- |
| 3 | | 3 | 148/2018042 | சகாய டெல்பின் | 5000/- | 750/- | 5750/- |
| 4 | | 4 | 148/2018043 | சபீக் அகமது | 5000/- | 750/- | 5750/- |
| 5 | | 5 | 148/2018044 | நபிஷா பீவி | 5000/- | 750/- | 5750/- |
| 6 | | 7 | 148/2018046 | பைசல் | 5000/- | 750/- | 5750/- |
| 7 | | 10 | 148/2018049 | அஜிதா | 3500/- | 525/- | 4025/- |
| 8 | | 11 | 148/2018050 | அஜிதா | 3500/- | 525/- | 4025/- |
| 9 | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் | 4 | 148/2018107 | ஷாகுல் அமீது | 3000/- | 450/- | 3450/- |
| 10 | | 5 | 148/2018108 | அயூப் கான் | 3500/- | 525/- | 4025/- |
| 11 | | 6 | 148/2018109 | அயூப் கான் | 3500/- | 525/- | 4025/- |
| 12 | | 7 | 148/2018110 | முகம்மது சலாவுதீன் | 3500/- | 525/- | 4025/- |
| 13 | கலைஞர் கருணாநிதி | 8 | 148/2018047 | பால்தாஸ் | 4000/- | 600/- | 4600/- |
| 14 | | 9 | 148/2018048 | பால்தாஸ் | 4000/- | 600/- | 4600/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | வணிக வளாகம் | 24 | 148/2018063 | சுந்தர் | 3500/- | 525/- | 4025/- |
| 16 | | 25 | 148/2018064 | சுந்தர் | 3500/- | 525/- | 4025/- |
| 17 | | 14, 21 | 148/2011004 | மார்ஷல் பெலிக்ஸ் | 5000/- | 750/- | 5750/- |
| 18 | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் | 28 | 148/BD01/0007 | கிங்ஸ்லி மில்டன் ராஜ் | 1150/- | 173/- | 1323/- |

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2573 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்.6-ஐ திரு.முகம்மது உபைஸ் என்பவர் 01.04.2018 முதல் கடையை நடத்தி வந்தார். கடைக்கு குத்தகை காலம் 31.07.2021 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. கடைக்கு குத்தகை உரிமம் புதுப்பிக்கப்படாமல் உள்ளது. கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.60,000/- மொத்தம் சேர்த்து ரூ.1,60,000/- இந்நகராட்சி பதிவேட்டில் உள்ளது. கடைக்கு மாத வாடகை பிப்ரவரி 2020 முதல் செப்டம்பர் 2021 வரைக்கும் ரூ.1,07,970/-ம் உள்ளதால் கடையினை 27.09.2021-ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது. கடைக்கு குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.1,000/-ம் கடை வாடகை நிலுவைத் தொகை ரூ.1,07,970/- மொத்தம் சேர்த்து ரூ.1,08,970/-ஐ முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து மீதமுள்ள தொகை ரூ.51,030/-ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2574 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் முதல் தளம் கடை எண்.27, வரிவிதிப்பு எண்.148/2012007-க்கு குத்தகை காலம் 31.10.2021 உடன் 9 ஆண்டுகள் முடிவடைகிறது. கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.10,000/- உள்ளது. ஆனால் கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் முதல் தளம் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் முதல் தளம் ஏலம் போகாத கடைகளுக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/- மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகையாக 12 மாத வாடகையும் உள்ளதால், மேற்படி கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/- மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகையாக 12 மாத வாடகையும் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2575 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தங்கள் வீட்டில் தினமும் சமையலறை மற்றும் குளியலறையில் உற்பத்தியாகும் கழிவு நீரை, நகராட்சிக்கு சொந்தமான மழைநீர் வடிகால் கால்வாய் பகுதியில் நேரடியாக விடப்பட்டு, மேற்படி நீர் நிலைகள் மாசுபடுகின்றன. எனவே பொது மக்கள் தங்கள் வீடுகளில் உறிஞ்சு குழி (Soak Pit) அமைத்து மேற்படி உறிஞ்சு குழிக்குள் கழிவு நீரை விட்டு, நீர்நிலைகள் மாசுபடாமல் இருப்பதற்கு வசதியாக அறிவிப்பு நோட்டீஸ் அச்சடிப்பதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | பெயர் | எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகம், தக்கலை | 1+1 | 375/– |
| 2 | ஈரோடு மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சங்கம், ஈரோடு. | 1+1 | 400/– |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியான கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகம், தக்கலைக்கு வினியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.889/2021/எச்1

**தீர்மானம் எண்.2576 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள் தரை தளம் 12,13 முதல் தளம் 44,45,46 மற்றும் 53 ஆகியவற்றில் இயங்கி வரும் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தின் குத்தகை உரிமம் 30.04.2021 உடன் 12 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு மாதவாடகையாக ரூ.7475/- (ஜி.எஸ்.டி தவிர) செலுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தை பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் மேற்காணும் கடைகள் மின்சார வாரிய அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதால், பொது மக்கள் நலந் கருதி கடை எண்கள் 12,13,44,45,46 மற்றும் 53 ஆகிய 6 கடைகளுக்கு 01.05.2021 முதல் 30.04.2024 வரை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்வதற்கும் தற்போதைய மாத வாடகையில் 15% உயர்வு செய்யவும் மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய மாதம் வாடகை (G.S.T தவிர) | 15% உயர்வு செய்த வாடகை | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை G.S.T தவிர) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12,13,44, 45,46,53 | 148/2009003 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 7475/- | 1121/- | 8596/- |

ந.க.எண்.1578/2007/அ1

**தீர்மானம் எண்.2577 அனுமதிக்கப்படுகிறது**